உறுப்பினர் அவர்கள் சில மலைப்பகுதிகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவில்லை என்று சொன்னார். எல்லா அழகிய இடங்களையும் இத்துறையின்கீழ் எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் விரைவில் ஈடுபடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. பெள்ளி கௌடர் : தலைவர் அவர்களே, எழிற் பகுதிகளாக எந்தெந்த இடங்கள் அரசாங்கத்தால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, கல்லத்தி நீர்வீழ்ச்சி, காதரைன் நீர்வீழ்ச்சி, லாம்ப்ஸ் ராக், டால்பின்ஸ் நோஸ், லேடி கானிங் சீட், லோஜ் நீர்வீழ்ச்சி, மோயார் நீர்வீழ்ச்சி, தோடாபெட்டா சிகரம், மூகர்த்தி சிகரம், குலிகல் ட்ரூக் கோட்டை, பிக்னிக் கார்னர் கேர்ன் ஹில் ஆகிய இவைகள்தாம் அந்த இடங்கள். இந்த பதினொன்று இடங்களையும் நீலகிரி பகுதியில் எழிற்பகுதி நிறைந்த இடங்களாக தேர்ந்தெடுத் திருக்கின்றனர்.

குமாரம் அருகிலுள்ள சோதனைச் சாவடி

* 26 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உணவு, வணிகத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், குமாரம் அருகிலுள்ள சுங்கச் சாவடியில் (Check Post) பணிபுரிந்து கொண்டிருந்த Special Revenue Inspector ஒருவர் சென்ற நவம்பர் முதல் வாரத்தில் தாக்கப்பட்டாரா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்த மாதிரியான நிகழ்ச்சி நடைபெற்றதும் அதன்மேல் உடனடியாக நடவடிக்கை எடுக்காமல், சட்ட சபையிலிருந்து கேள்வி போன பிறகுதான் விசாரணை ஆரம்பித்துள்ளது என்பது உண்மையா ? அரசாங்கப் பணிபுரியும்போது அரசு ஊழியர் ஒருவருக்குக் காயம்பட்டாலும், ஊனம் எற்பட்டாலும், இறக்க நேரிட்டாலும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அரசாங்கம் என்ன நட்ட ஈடு வழங்குகிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, எப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. கள்ளக் கடத்தல் செய்பவர்கள் அந்த ஆய்வாளரைப் பயமுறுத்தினார்கள். உடனடியாக அலங்காநல்லூர் காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. அந்த நபர்களின் அடையாளம் கண்டுகொள்ள முடியாததால் அவர்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.